**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | |
|---|---|
| Case No. | : CC No. 55/2023 |
| Deposition of witness for Prosecution | : P.W-2 |
| Name | : குமாரசாமி, வயது 49 |
| Father Name/Husband Name | : கந்தசாமி |
| Village | : வானரமுட்டி |
| Taluk | : கோவில்பட்டி |
| Calling | : கொத்தவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of June 2023.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது வானரமுட்டியில் வசித்து கொத்த வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும் சம்பவதன்று அவர் தான் காரை ஓட்டி வந்தார். இறந்த ராஜேந்திரன் எனது மைத்துனர் உறவு முறை. அ.சா.1 எனது தங்கை முறை.
2. தேதி மாதம் தெரியாது போன வருடம் ஒரு நாள் இரவு 07.15 மணியளவில் தேவர்குளத்திற்கும் தோனுகால் அருகே உள்ள சுடுகாடு அருகே நான் தேவர்குளத்தில் இருந்து வந்து கொண்டிருந்தேன் இறந்த நபர் இருச்சக்கர வாகனத்தில் எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்தார்.
3. எதிரே வந்த வாகனம் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அதனால் அவருக்கு தலையில் இரத்தக்காயம் ஏற்பட்டது. அதன் பின்னர் எனது மருமகனுக்கு போன் செய்து தகவல் சொன்னேன். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்லப்பட்டார்.
4. பின்னர் மறுநாள் அவர் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன் வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. உங்களுக்கும் இராமலிங்காபுரம் தான் என்றால் சரிதான். நீங்கள் ராஜேந்திரனுடன் தான் வேலை பார்த்தீர்கள் என்றால் சரிதான். வேலை எத்தனை மணிக்கு முடிந்தத என்றால் 06.15 மணிக்கு முடிந்தது. வேலை முடிந்து தேவர்குளத்தில் இருந்து 06.15 கிளம்பிவிட்டீர்கள் என்றால் சரிதான்.
2. உங்களுடன் இன்னோரு நபர் வந்தார் என்றால் சரிதான். அவர்

எதில் வந்தார் என்றால் சைக்கிளில் வந்தார். நீங்கள் சம்பவம் நடந்த சாலையில் தான் தினமும் வேலைக்கு செல்வீர்கள் என்றால் சரிதான். அதனால் அந்த சாலை உங்களுக்கு நன்கு பரீட்சயம் என்றால் சரிதான்.

3. தேவர்குளத்திற்கும் சம்பவ இடத்திற்கு எவ்வளவு தூரம் என்றால் 100 மீட்டருக்குள் தான் இருக்கும். சம்பவம் நடந்த சாலையில் ஒரு கார் போனால் இன்னோரு கார் போகமுடியாது என்றால் சரிதான். இறந்த ராஜேந்திரனுக்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் சரிதான்.
4. நீங்கள் சம்பவத்தினை பார்க்கும் போது எந்த வண்டி என்று பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். இரண்டு வண்டி அங்கு தான் நின்றிருந்தது. அ.சா.1 உங்களுக்கு என்ன உறவு முறை என்றால் பெரியப்பா மகள்.
5. உங்களுக்கு இரவு நேரம் நல்ல கண்பார்வை உண்டா என்றால் உண்டு. சம்பவ இடத்தில் சம்பவத்தன்று இரவு அங்கு மின்விளக்குகள் இருந்ததா என்றால் இல்லை. நீங்கள் கொத்தனாரா சித்தாளா என்றால் சித்தாள்.
6. சம்பவத்தன்று என்ன கிழமை என்று தெரியுமா என்றால் நினைவில் இல்லை. நீங்கள் சம்பவத்தன்று வேலைக்கு போகவில்லை என்றாலும் சம்பவம் பற்றி உங்களுக்கு தெரியாது என்றாலும் அ.சா.1 உங்கள் பெரியப்பா மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால்சரியல்ல.
7. சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தீர்கள் என்றால் ஒரு மணிநேரம் இருந்தேன். அங்கு கூட்டம் கூடிவிட்டது என்றால் சரிதான். போலிசார் உங்களுக்கு முன்னரே வந்துவிட்டார்கள் என்றால் சரிதான்.
8. நீங்கள் போலிசாரிடம் புகார் கொடுத்தீர்களா என்றால் இல்லை. நீங்கள் சொன்ன நாள் நேரத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.